IN THE COURT OF THE SUBORDINATE COURT, VANDAVASI

**CASE NO: OS.50/2025**

DEPOSITION OF WITNESS: **PW1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name/பெயர் | : | கிருஷ்ணமூர்த்தி | | : | |
| Father's/Husband's Name தந்தை/கணவர் பெயர் | : | கோவிந்தன் | Calling/ தொழில் | : | |
| Village/கிராமம் | : | பெரணமல்லூர் | | : | |
| Taluk/தாலுக்கா | : | வந்தவாசி | Age/வயது | : | 53 |

The witness sworn under Oaths Act 1969 on this the day of 25th day of November 2025.

**முதல் விசாரணை**

நான் பெரணமல்லூர் கிராமத்தில் வசிக்கிறேன். நான் வழக்கின் வாதி ஆவேன். பிரதிவாதியை தெரியும். முதல் விசாரணைக்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். படித்துபார்த்து கையொப்பம் செய்தேன். கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

**வாதி தரப்பில் தாக்கல் செய்யும் ஆவணங்கள்**

1. தாவா 2வது அயிட்ட சொத்தினை வாதியின் தந்தை கோவிந்தன் கண்ணகவுண்டர் என்பவரிடம் கிரையம் பெற்ற கிரையப்பத்திரத்தின் அசல் நாள் 19.05.1980. **வா.சா.ஆ.1** ஆகும்.

2. தாவா 3,4 அயிட்ட சொத்துக்களை வாதியின் தந்தை கோவிந்தன் தாமோதரன் வகையறாவிடம் கிரையம் பெற்ற கிரையபத்திரத்தின் அசல் நாள் 30.04.1991 **வா.சா.ஆ.2** ஆகும்.

3. வாதியின் தந்தையின் இறப்பு சான்று **வா.சா.ஆ.3** ஆகும்.

4. வாதியின் தாயார் இறப்பு சான்று **வா.சா.ஆ.4** ஆகும்.

5. வாதியின் தந்தை வாரிசு சான்று **வா.சா.ஆ.5** ஆகும்.

6. தாவா 1வது அயிட்ட சொத்துக்குரிய பட்டா பட்டா எண். 3863 **வா.சா.ஆ.6** ஆகும்.

7. தாவா 2-வது அயிட்ட சொத்துக்குரிய கணிணி பட்டா பட்டா எண்.3835

**வா.சா.ஆ.7** ஆகும்.

8. தாவா 3, 4 அயிட்ட சொத்துக்குரிய கணிணி பட்டா பட்டா எண்.197 **வா.சா.ஆ.8** ஆகும்.

9.தாவா 5, 6 அயிட்ட சொத்துக்குரிய கணிணி பட்டா பட்டா எண்.14 **வா.சா.ஆ.9** ஆகும்.

10. தாவா 1வது அயிட்ட சொத்துக்குரிய வில்லங்க சான்று 01.01.1975 முதல் 29.01.2025 வரை **வா.சா.ஆ.10** ஆகும்.

11. தாவா 7 வது அயிட்ட சொத்துக்குரிய கணிணி பட்டா பட்டா எண்.277 **வா.சா.ஆ.11** ஆ கும்.

எனவே, பிராதுபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S
Digitally signed by SARANYA S
Date: 2025.11.25 06:07:17 +0530

சார்புநீதிபதி
வந்தவாசி

சாட்சியின் கையொப்பம்